# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**ஆணைக்குழு சுற்றறிக்கை இல- 12/2019**

இல 20, வார்ட் பிளேஸ்
கொழும்பு -07
22 கார்த்திகை 2019

பல்கலைக் கழக துணை வேந்தர்கள்
வளாக முதல்வர்கள்
நிறுவன பணிப்பாளர்கள்

**அரச பல்கலைக் கழகங்கள், உயாகல்வி நிறுவனங்களில் பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறையை எதிர்பதற்கு அமுல்படுத்தப்பட வேண்டிய மூலோபாயங்கள் / நடவடிக்கைகள்**

'பகிடிவதை' எனும் போர்வையின் கீழ் பெருமளவு எண்ணிக்கையிலான புதுமுக மாணவர்கள் தங்களுடைய சிரேஸ்ட மாணவர்களால் கொடுமைப்படுத்தப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றமை சான்றாக உள்ளதுடன் இத்தகைய செயற்பாடுகள் தற்பொழுது பொது மக்களின் முக்கிய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. பல்கலைக் கழகங்களால் பகிடிவதை தொடர்பாக தெரிவிப்பதற்கு அவசியமாக தேவைப்படுகின்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் அவை வேறுபட்ட வெற்றி மட்டங்ளையும் கொண்டிருந்திருந்தன. துரதிஸ்டவசமாக அந்த நடவடிக்கைகள் நிலைத்த முறைமையான சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவதில் தோல்வியடைந்துள்ளன. இத்தகைய ஆய்வுகள் பகிடிவதை பிரச்சினைக்குள்ளே பெறுமதிமிக்க நுண்ணறிவைத் தருகின்றபோதிலும் பாதுகாப்பதற்கான மூலோபாயங்கள் மற்றும் செயற்பாடுகளின் பரந்த முறைமையுடன் இணைந்து காணப்படவில்லை. எனவே பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறையுடன் போராடுவதற்கான மூலோபாயங்களின் ஒரு தொகுதியானது பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட கொள்கை மற்றும் மூலோபாயங்களுடன் இணைக்கப்ட்ட பரந்த முறைமையிலான ஆராய்ச்சியொன்றின் ஊடாக மேம்படுத்தப்பட்டது.

அனைத்து பல்கலைக் கழக பன்முகத்தன்மை கொண்ட பங்குதாரர்களுடன் செல்லுபடியாகக் கூடிய ஆலோசனைச் செயலமர்வுகளின் தொடரொன்றினை முன்னதாக நடத்தி பின்னர் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு, நகர திட்மிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் 14ம் திகதி கார்த்திகை மாதம் 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் விளைவுகள் இறுதிப்படுத்தப்பட்டன.

சுற்றுநிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மூலோபாயங்கள் / நடவடிக்கைகள்

ஆணைக்குழு சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள மூலோபாயங்கள் / நடவடிக்கைகளை அமுல்படுத்தவும் மூலோபாயங்கள் / நடவடிக்கைகள் உள்ளடக்கியிருக்கின்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான துணை விதிகளை மேம்படுத்தவும் பல்கலைக் கழகங்கள் பணிக்கப்படுகின்றன.

1. பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறையின் மனிதநேயமற்ற விளைவுகள் தொடர்பாக உணர்வுபூர்வமான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்த பல்கலைக் கழகங்கள் காணப்படுகின்றன.

2. இத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்களை பெற்றோர்கள், பல்கலைக்கழக நுழைவுக்காக காத்திருக்கும் மாணவர்கள், பிரதேசத்திலுள்ள மதத் தலைவர்கள், ஊடகங்கள் மற்றும் பொது மக்களுக்காக நடாத்தப்படல் வேண்டும்.

3. இத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்களிலிருந்து கிடைக்கப் பெற்ற வலையமைப்பு மற்றும் தொடர்பாடல்களை பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறையில் தங்களுடைய பிள்ளைகள் ஒருபோதும் ஈடுபடமாட்டார்கள் எனவும் பகிடிவதை செய்வோரை பார்த்து பயப்படாது நம்பிக்கையை வளர்த்துக் கொள்வார்கள் எனவும் பெற்றோரை இணங்க வைப்பதற்கு பயன்படுத்தபட வேண்டும்.

4. பிள்ளைகள் ஒருபோதும் பகிடிவதையில் ஈடுபடமாட்டார்கள் எனவும் பகிடிவதை செய்வோரை பார்த்து பயப்பட மாட்டார்கள் எனவும் தங்களுடைய பிள்ளைகளை இணங்க வைப்பதற்காக பல்கலைக் கழக நுழைவிற்கு சாத்தியமானவர்களின் பெற்றோர் மீது தம்முடைய செல்வாக்கை பயன்படுத்துவதற்கு மதத் தலைவர்கள் மற்றும் உள்ளூர் பாடசாலை அதிபர்கள் உள்ளடங்கிய சனசமுக தலைவர்கள் வலையமைப்பொன்றை உருவாக்குபவர்களாக துணை வேந்தர்களும் பீடாதிபதிகளும் இருக்கின்றனர்.

5. பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறைக்கு முகங் கொடுக்கும் போது அவனோ/ அவளோ உதவிக்காகவும் வழிகாட்டலுக்காகவும் கட்டாயமாக வருவதற்கு விரிவான அச்சிடப்பட்ட

துண்டுபிரசுத்தை ஒவ்வொரு புதுமுக மாணவருக்கும் வழங்குவதற்கு பல்கலைக் கழகங்கள் காணப்படுகின்றன்றன. பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பால்நிலை சமம் / பால்நிலை சமத்தவத்துக்கான நிலையம் மற்றும் பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறையை பாதுகாக்கின்ற நிலையம் துண்டுபிரசுரத்துக்கான பொதுவான வடிவமொன்றை உருவாக்குவதற்கு பல்கலைக் கழகங்களுக்கு உதவி செய்யும்.

6. 1998 ஆம் ஆண்டின் 20ம் இலக்க கல்வி நிறுவனஙக்ளில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடுத்தல் சட்டம் மற்றும் 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் என்பவற்றின் பிரகாரம் மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கும் அறிவூட்டுவதற்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்களை நடத்துவதற்கும் பல்கலைக் கழகங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு புதுமுக மாணவரும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து 20ம் இலக்க மற்றும் 04ம் இலக்க சட்டங்களின் பிரதிகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

7. பல்கலைக் கழக நிர்வாகம், கல்விசார் ஊழியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு இடையில் நெருக்கமான ஓர் உறவினை ஏற்படுத்துவதற்கு முறைமையொன்றை மேம்படுத்துவதற்கும் பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறை தொடர்பான தங்களுடைய புகார்களை முன்வைப்பதற்கு பெற்றோர்களுக்கான நிலையான நிறுவனம்சார் பொறிமுறையொன்றினை மேம்படுத்துவதற்கும் பல்கலைக் கழகங்கள் காணப்படுகின்றன.

8. 1ம் அரையாண்டு பரீட்சைகளுக்கு தோற்றியுள்ள பதிவுசெய்யப்பட்ட புதிய மாணவர்களின் எண்ணிக்கையை பல்கலைக் கழகங்கள் கண்காணித்துக் கொள்ள வேண்டும். 1ம் அரையாண்டு பரீட்சைகளுக்கு தோற்றாதமைக்கான காரணங்களை உறுதிசெய்வதற்கும் பொருத்தமான முறையில் ஆலோசனை வழங்கி தங்களுடைய கற்கைகளை தொடர்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்துவதற்கும் பல்கலைக் கழகங்கள் காணப்படுகின்றன.

9. **அனைத்து 1ம் அரையாண்டு பரீட்சைகள் முடிவிலும் பரீட்சை எழுதாதவர்களின் பட்டியலை அனைத்து பல்கலைக் கழகங்களும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.**

10. சுத்தமாக்கல் பணிகள், சிற்றுண்டிச் சாலை மற்றும் பாதுகாப்பு பணியாளர்கள் போன்ற வெளிவரியான சேவையாளர்களுடன் நெருக்கமான தொடர்பினை பேணி இத்தகைய குற்றச் செயல்களைளின் இடங்கள், சம்பவங்கள் மற்றும் செய்த குற்றவாளிகள் தொடர்பாக உளவுத் தகவலை பெற்றுக் கொள்வதற்கு பல்கலைக் கழகங்கள் காணப்படுகின்றன.

11. பல்கலைக் கழகங்களில் பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறைச் செயல்களை முற்றாகத் தடுப்பதற்கு ஈடுபட்டுள்ள அனைத்து தடையற்ற ஆதரவு மற்றும் வசதிவாய்ப்புகளை உறுதிசெய்வதற்கு துணைவேந்தர்கள் மற்றும் பீடாதிபதிகள் காணப்படுகின்றனர்.

12. பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறையை தடுத்தலுடன் சம்மந்தப்பட்ட செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கு விடுதி பொறுப்பாளர், ஒழுங்குநிலை பேணுநர், ஒழுக்க பொறுப்பதிகாரி மற்றும் மாணவ ஆலோசகர்களுக்கான ஒழுங்கு முறையிலான கூட்டங்களை தலைமை தாங்குவதற்கு துணைவேந்தர்கள் மற்றும் பீடாதிபதிகள் காணப்படுகின்றனர்.

13. இத்தகை அனுபவங்களை அறிக்கையிடுவதற்கு மாணவர்களின் நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதற்கு ஆதரவினை வழங்குவதற்கு மாணவர்-ஆசிரியர் இடைத் தொடர்பினை அதிகப்படுத்திக் கொள்வதற்கு பல்கலைக் கழகங்கள் காணப்படுகின்றன.

14. பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறை தொடர்பில் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் ஆதரவை பெற்றுக் கொள்வதற்கு துணைவேந்தர்கள் / பீடாதிபதிகள் காணப்படுகின்றனர்.

15. மாணவர்களுக்கு தங்களுடைய உரிமைகள் பொறுப்புக்கள் பற்றி தெரிவிப்பதற்கும் பகிடிவதையில் ஈடுபடுவதால் நேரிடும் ஆபத்துக்கள் மற்றும் தண்டனைகள், தங்களுடைய மனக் குறைகளை ஆற்றிக்கொள்வதற்கான வழிகளை கிடைக்க செய்வதற்கும் முறையான கருத்தமர்வுகளை நடத்துவதற்கு பீடங்கள் காணப்படுகின்றன.

16. பல்கலைக் கழக மட்டத்திலும் பீட மட்டத்திலும் பகிடிவதைக்கு எதிரான மன்றங்களை அமைப்பதற்கு பல்கலைக் கழகங்கள் காணப்படுகின்றன.

17. பல்கலைக் கழகத்திற்கான பகிடிவதைக்கு எதிரான மன்றம் துணைவேந்தரினால் தலைமை தாங்கப்படும்.

18. பீடத்திற்கான பகிடிவதைக்கு எதிரான மன்றம் பீடாதிபதியினால் தலைமை தாங்கப்படும்.

19. பகிடிவதைக்கு எதிரான மன்றமானது கல்விசார் ஊழியர்கள், நிர்வாக ஊழியர்கள், கல்விசாரா ஊழியர்கள், ஒழுங்குநிலை பேணுநர்கள், ஒழுக்க பொறுப்பதிகாரிகள் மற்றும் சிரேஸ்ட மாணவ

ஆலோசகர்கள், பெற்றோர்கள், புதிய மற்றும் சிரேஸ்ட மாணவர்கள் போன்ற பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவாக இருக்க வேண்டும்.

20. பகிடிவதைக்கு எதிரான மன்றமானது பல்கலைக் கழகத்திலும் பீடத்திலும் பகிடிவதை செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு ஒழுங்கு முறையான கூட்டங்களை நடத்துவதுடன் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு பேரவைக்கு தகவல் வழங்கப்பட வேண்டும்.

21. பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறையை நிராகரிக்கின்ற மாணவர்கள் மற்றும் ஊழியர்களை பரிசளிப்பதற்கு பொருத்தமான பொறிமுறைகளை உருவாக்குவதற்கு துணைவேந்தர்கள்/ பேரவைகள் காணப்படுகின்றன.

22. பொருத்தமான தொழில்நுட்பத்தை (கண்காணிப்பு பணியாளர்களுக்கான தொலைபேசி, பொக்கட் கமரா என்பவற்றை) மேம்படுத்துவதற்கு துணைவேந்தர்கள்/ பீடாதிபதிகள் காணப்படுகின்றனர்.

23. பெற்றோரின் ஆதரவுடன் பகிடிவதையை தடுப்பதற்கு திடீர் பயணங்களை மேற்கொள்ளுதலை கண்காணிப்பு பொறிமுறைகளுக்குள் சேர்த்தல்.

24. பல்கலைக் கழக இணையத்தளத்தின் மூலமாக மாணவர்களுக்கான நடத்தை நெறி கோவையினை பிரசுரம் செய்வதற்கு பல்கலைக் கழகங்கள் காணப்படுகின்றன.

25. ஒவ்வொரு ஆண்டிலும் இருந்து ஓர் சமமான பிரதிநிதித்துவம் மற்றும் பொருத்தமான பால்நிலை பிரதிநிதித்துவம் என்பவற்றை வலியுறுத்துவதன் மூலமாக உத்தியோகபூர்வமான மாணவர் மன்றங்களின் முறையான தொகுப்பொன்றை உறுதிப்படுத்த பல்கலைக் கழகங்கள் காணப்படுகின்றன.

26. இந்த முறைமைக்குள் மாணவர்கள் தங்களுடைய நம்பிக்கையை இழக்காது பாதுகாப்பதற்கு மாணவர் புகார்களை கூறுகின்றபோது வினைத்திறன்மிக்க விசாரணை செயன்முறையை (ஆரம்பகட்ட மற்றும் முறையான விசாரணைகள்) உறுதிப்படுத்த பல்கலைக் கழகங்கள் காணப்படுகின்றன.

27. கல்வி இடைநீக்கம் செய்யப்படுகின்றவர்கள் வினைத் திறன்மிக்க விசாரணைச் செயன்முறையை ஒன்றை ஆரம்பிப்பதன் பிரகாரம் இறுக்கமான முறையில் எல்லைக்கு வெளியே (Out of bounds) அனுப்புதலை பல்கலைக் கழகங்கள உறுதிசெய்ய வேண்டும்.

28. இடைநீக்கம் அல்லது அனுதாபத்தின் அடிப்படையில் தண்டனையை குறைத்தல் துணைவேந்தர்/ பேரவைகளினால் மேற்கொள்ளப்பட மாட்டாது.

29. 1998 ஆம் ஆண்டின் 20ம் இலக்க 2ம் பிரிவின் வன்செயல் மற்றும் வேறுவகையான வன்செயல்களையும் தடுத்தல் சட்டத்தின் கீழ் பகிடிவதை தொடர்பில் புகார்களை பதிவு செய்வதற்கும் 1998 ஆம் ஆண்டின் 20ம் இலக்க 3ம் பிரிவின் வன்செயல் மற்றும் வேறுவகையான வன்செயல்களையும் தடுத்தல் சட்டத்தின் கீழ் குற்ற மிரட்டல் வழக்குகளை பதிவு செய்வதற்கும் பல்கலைக் கழகங்கள் பொலிஸாரை வலியுறுத்தலாம்.

30. பகிடிவதை வழக்கொன்று அறிவிக்கபடும் போதெல்லாம் பல்கலைக் கழகங்கள் தங்களுடைய விசாரணைச் செயன்முறையை ஒரேநேரத்தில் தொடர்வதற்கு பல்கலைக் கழகங்கள் காணப்படுகின்றன.

31. பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறை தொடர்பாக பேசுவதற்கு பல்கலைக் கழக மட்டங்களில் கவனம் செலுத்தக் கூடியவராக தகுதியுடைய, ஈடுபாடுடைய ஒருவரை நியமிப்பதற்கு துணைவேந்தர்கள் காணப்படுகின்றனர்.

32. பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறை தொடர்பாக பேசுவதற்கு பீட மட்டங்களில் கவனம் செலுத்தக் கூடிய ஒருவரை நியமிப்பதற்கு பீடாதிபதிகள் காணப்படுகின்றனர்.

33. பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறை தொடர்பான விடயம் ஒவ்வொரு பேரவைக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இருத்தல் வேண்டும்.

34. பாதிக்கப்பட்ட தரப்பினரால் அடிப்படை உரிமைகள் விண்ணப்பம் ஒன்று மேற்கொள்ளப்படும் சூழலில் துணைவேந்தர்கள் மற்றும் பேரவை உறுப்பினர்கள் வினைத்திறனற்று செயற்படும் சந்தர்பங்களில் தங்களுடைய பொறுப்பு, பொறுப்புகூறல் மற்றும் பாதிப்பு தொடர்பில் கவனமாக இருத்தல் வேண்டும்.

35. 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஊழியர்கள், மாணவர்கள், மற்றும் சாட்சிகளை பாதுகாப்பதற்கு போதுமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக துணைவேந்தர்கள், பீடாதிபதிகள் மற்றும் பேரவை உறுப்பினர்கள் காணப்படுகின்றனர்.

.......................................
தலைவர்

பிரதிகள்:

1. செயலாளர் /நகர திட்மிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு
2. தலைவர் அலுவலகம்/ பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு
3. துணைத் தலைவர் / பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு
4. பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்
5. செயலாளர்/ பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பல்கலைக் கழகங்களின் பதிவாளர்கள்
7. பீடங்களுக்கான பீடாதிபதிகள்
8. கணக்காளர்/ பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக் கழகங்களின் நிதியாளர்கள்
10. உயர்கல்வி நிறுவனங்கள்/ கல்வி நிறுவனங்களின் நூலகர்கள் SAL/AL
11. வளாகங்கள்/ கல்விநிறுவனங்களின் துணைப் பதிவாளர்கள்/ சிரேஸ்ட உதவி பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள்
12. வளாகங்கள்/ கல்விநிறுவனங்களின் துணை நிதியாளர்கள்/ சிரேஸ்ட உதவி நிதியாளர்கள்/ உதவி நிதியாளர்கள்
13. உள்ளக கணக்காய்வாளர்/ பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு
14. பல்கலைக் கழகங்களின் அரசாங்க கணக்காய்வு கண்காணிப்பாளர்கள்
15. உயர்கல்வி நிறுவனங்களின் சிரேஸ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர்கள்
16. வர்த்தக சங்கங்களின் செயலாளர்கள்
17. கணக்காய்வாளர் நாயகம்

கோவை இல: UGC/CGEE/PO_D-01